**11.01.2023**

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**அமர்வு வழக்கு எண்.375/2021**

**அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயகணேஷ் | சாதி | |
| த/பெ. | சேகர் | மதம் | |
| கிராமம் | பண்டசோழநல்லூர் | தொழில் | |
| மாநிலம் | பாண்டிச்சேரி | வயது | 36/2023 |
| மாவட்டம் | | தேதி | 11.01.2023 |

( 11.01.2023) இன்று 1963 ம் ஆண்டு சட்டம் 44 ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் பண்டசோழநல்லூரில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 நதியா எனது தங்கை. இவ்வழக்கில் இறந்துபோன ஐயப்பன் எனது தங்கையின் கணவர். சுமார் 12 வருடத்திற்கு முன்பு சிவபெருமான் பாளையத்தை சேர்ந்த ஐயப்பன் என்பருக்கு திருமணம் செய்து வைத்தோம். 2 வது எதிரி சரவணனும், அவரது மனைவியும் எனது தங்கையின் நடத்தையை பற்றி தவறாக பேசியதால் அது சம்பந்தமாக சண்டை நடந்தது என்றும், அதனை தொடர்ந்து எனது தங்கைக்கும், அவரது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு எனது தங்கை கோவித்து கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். எனது மாமா சரவணனின் மனைவியிடம் தகராறு செய்து தாக்கிவிட்டார் என்றும், அதனால் அவர்கள் மருத்துவமனைக்கு சென்றுள்ளார்கள் என்றும், விவரம் தெரிந்து நான் எனது தங்கையை அழைத்து வந்து அவரது கணவர் வீட்டில் காலையில் விட்டேன். நான் வேலைக்கு போய்விட்டேன். 25.04.2021 ம் தேதி சம்பவம் நடந்துள்ளது. எனக்கு மதியம் 1 மணியளவில் எனது தங்கை எனக்கு போன் செய்து ஐயப்பனை அடிக்கிறார்கள் என்று சொன்னார். எனக்கு வேலை இருந்ததால் நான் வேலைக்கு போய்விட்டேன். பின்னர் சாயந்திரம் 4.30 மணிக்குதான் சிவபெருமான் பாளையம் வந்தேன். எதிரிகள் சரவணன், சரத்குமார், சரவணனின் மனைவி விஜயகுமாரி, குமாரவேலு ஆகியோர் எனது மாமா ஐயப்பனை அடித்ததாக சொன்னார்கள். ஆம்புலன்சில் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று இருப்பதாகவும் சொன்னார்கள். நான் முண்டியம்பாக்கம் அரசு

மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு சிகிச்சையில் இருந்தவரை பார்க்க அனுமதிக்கவில்லை. அன்று இரவே ஐயப்பன் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை விசாரித்தபோலீஸ் அதிகாரியின் பதவி எனக்கு தெரியாது. விசாரித்த தேதி நினைவில்லை. 25.04.2021ம் தேதி எனது மாமா ஐயப்பனின் ஊருக்கு நான் வந்தேன். அன்று சாயந்திரமே என்னை போலீசார் விசாரித்தார்கள். முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலீஸ் விசாரணையிலும் சொன்னேன். 25.04.2021ம் தேதி காலை 9.30 மணியளவில்தான் நான் எனது தங்கையை அவரது கணவர் ஊருக்கு அழைத்து வந்தேன் என்று எனது தங்கை சொல்லியிருந்தால் அது தவறு. 22ம் தேதி எனது மாமா ஐயப்பன் சரவணனின் மனைவியை தாக்கியதாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 25.04.2021ம் தேதிக்கு 3 நாட்களுக்கு முன்பே எனது தங்கையை அவரது கணவர் வீட்டில் விட்டு சென்றேன். சம்பவத்தன்று பகல் 1 மணிக்கு எனது தங்கை போன் செய்து எனது மாமா ஐயப்பனை அடிக்கிறார் என்று தகவல் சொன்னார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஐயப்பன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்ற தகவல் அறிந்துதான் எங்கள் ஊரில் இருந்து நானும், எனது தங்கையும் மருத்துவமனைக்கு வந்து பார்த்தோம் என்றால் சரியல்ல. ஐயப்பன் 2வது எதிரியின் மனைவியை தாக்கி அவருக்கு எதிராக காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தால் தலைமறைவாக இருந்த ஐயப்பனை யாரோ தாக்கி காயம் அடைந்துள்ளார் என்றும், அந்த காயங்களை பயன்படுத்தி எதிரிகளை பழிவாங்க எனது உறவினர் கன்னியப்பன் தூண்டுதலின் பேரில் பொய் புகார் கொடுக்கப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.